மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

10.08.2022 புதன்கிழமை | supeedsam.com | supeedsam@gmail.com

# அரசாங்கத்தின் மொத்த செலவு 47,943 கோடியால் அதிகரிப்பு




நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டு திருத்தச் சட்டமூலத்தின்படி, இந்த வருட அரசாங்கத்தின் மொத்தச் செலவு 47 ஆயிரத்து தொள்ளாயிரத்து 43 கோடி ரூபாயால் அதிகரித்துள்ளது. இந்த ஆண்டுக்காக, கடந்த நவம்பரில் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின்படி, மொத்தச் செலவு, 2 இலட்சத்து ஒன்பதாயிரத்து 664 கோடியே 02

## நாளை தாய்லாந்துக்கு பறக்கின்றார் கோட்டா



முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தென்கிழக்கு ஆசிய நாடான தாய்லாந்துக்கு நாளை செல்லவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. போராட்டத்தை அடுத்து இலங்கையின் வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷ மாலைதீவு வழியாக சிங்கப்பூருக்கு சென்றிருந்தார். இந்நிலையில் சிங்கப்பூரில் இருந்து தாய்லாந்து வருவார் என எதிர்பார்க்கப்படுவதாக இரண்டு ஆதாரங்களை மேற்கோளிட்டு ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

## மஹிந்த, பசிலுக்கான பயணத்தடை நீடிப்பு

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தென்கிழக்கு ஆசிய நாடான தாய்லாந்துக்கு நாளை செல்லவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. போராட்டத்தை அடுத்து இலங்கையின் வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷ மாலைதீவு வழியாக சிங்கப்பூருக்கு சென்றிருந்தார். இந்நிலையில் சிங்கப்பூரில் இருந்து தாய்லாந்து வருவார் என எதிர்பார்க்கப்படுவதாக இரண்டு ஆதாரங்களை மேற்கோளிட்டு ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

## நாடாளுமன்றத்திற்குள் ஒரு சட்டம், மக்களுக்கு வேறு சட்டமா?



நாடாளுமன்றத்திற்குள் ஒரு சட்டமும் நாட்டு மக்களுக்கு வேறு சட்டமும் நடைமுறையில் உள்ளதா என்பதை சபாநாயகர் உடனடியாக தெளிவுபடுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார். நாடாளுமன்றில் இன்று (புதன்கிழமை) நாடாளுமன்றத்திலும், சபாபீடத்திலும் பொதுச் சொத்துச் சட்டம் செல்லாது என்ற தவறான கருத்து நேற்று அமைச்சர் தெரிவித்ததாக சுட்டிக்காட்டினார்.

குற்றவியல் சட்டம் இந்த சபையில் செல்லுப்படியாகாதா என்பதை சபாநாயகர் அறிவிக்க வேண்டும் என சஜித் பிரேமதாச கேட்டுக்கொண்டார். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குள்ள அதிகாரங்கள் குறித்து நாட்டையே தவறாக வழிநடத்தும் சம்பவமொன்று நேற்று இடம்பெற்றது என்றும் சுட்டிக்காட்டினார். சொத்து சேதம் மற்றும் நாடாளுமன்றம் தொடர்பான ஏனைய சம்பவங்கள் தொடர்பில் நாட்டின் வழமையான சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியாது என பந்துல குணவர்தன நேற்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய விளையாட்டு சபையின் தலைவராக அர்ஜீன ரணதுங்க

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜீன ரணதுங்க தேசிய விளையாட்டு சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். 15 உறுப்பினர்களைக் கொண்ட இந்த சபைக்கான நியமனம் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் வழங்கப்பட்டுள்ளது.

## மின்வெட்டில்லை

நாளை வியாழக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை மின் வெட்டு இல்லை என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதேவேளை, வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் ஒரு மணித்தியாலம் மின் வெட்டு அமுல்படுத்தப்படும் என மேலும் தெரிவித்துள்ளது.

## தேனீர் செலவை செலுத்தினார் ஜனாதிபதி

9 ஆவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தேநீர் விருந்துபசாரத்திற்கான கட்டணத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செலுத்தியுள்ளார். 09 ஆவது பாராளுமன்றத்தின் 3 ஆவது கூட்டத்தொடர் கடந்த 3 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டதையடுத்து அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி தேநீர் விருந்தளித்தார். இந்த தேநீர் விருந்துபசாரத்திற்கு செலவான 272,000 ரூபாவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது தனிப்பட்ட நிதியைப் பயன்படுத்தி செலுத்தியுள்ளார். ஜனாதிபதி விக்ரமசிங்கவின் சார்பில் பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான ஜனாதிபதியின் செயலாளரான ஆ/ மாரசிங்க இதற்கான கட்டணத்தை செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொவிட் தொற்றால் 9பேர் மரணம்



நாட்டில் நேற்று (09.08.2022) கொரோனா தொற்று காரணமாக மேலும் 09 பேர் உயிரழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அநத வகையில்.60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 4 ஆண்களும் 5 பெண்களுமாக 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

## 1321 சந்தேக நபர்கள் கைது

இதுவரை நடத்தப்பட்ட பல்வேறு சோதனைகளில் மொத்தம் 1,387 சோதனைகளில், 1,321 சந்தேக நபர்கள் சட்டவிரோதமாக எரிபொருள் சேமிப்பு மற்றும் விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர். 44,777 லீற்றர் பெற்றோல் மற்றும் 20,208 லீற்றர் மண்ணெண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## 12 திட்டங்களை நிறுத்தியது ஜெய்க்கா



இன்று நாடாளுமன்றில் உரையாற்றிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, ஜெய்க்கா நிறுவனம், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஜப்பானின் 12 திட்டங்களுக்கான நிதியை ரத்துசெய்துள்ளதாக குறிப்பிட்டார். இலங்கை, சர்வதேச நாடுகளில் இருந்து பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்தப்போவதில்லை என்று அறிவித்திருந்த நிலையிலேயே ஜெய்க்கா நிறுவனம், இந்த தீர்மானத்தை எடுத்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.எனினும் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாட்டுக்கு வரும் வரையிலேயே இந்த நிதி தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக ஜெய்க்கா நிதியம் அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.ர்

## கர்ப்பிணிப் பெண்களுக்கு ஆபத்து

நாட்டில் அடுத்த 2-3 மாதங்களில் அதிகமான மருந்துகளின் கையிருப்பு தீர்ந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுவதாக ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் தெரிவித்துள்ளது.

அமைப்பு, ஜப்பான் அரசாங்கத்துடன் இணைந்து பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியத்தை நிலைநிறுத்துவதற்கு முக்கியமான 3 மாத மதிப்புள்ள உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்களை சுகாதார அமைச்சிடம் இன்று ஒப்படைத்தது.

இந்த நிலையில், UNFPA இன் கூற்றுப்படி, இலங்கையின் சமூக, பொருளாதார

## தங்குவதற்கு இடமளித்துள்ளோம்



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிற்கு மனிதாபிமான அடிப்படையில்தாய்லாந்தில் தங்குவதற்கு இடமளித்துள்ளதாக தாய்லாந்து பிரதமர்பிரயுத் சான் ஓசா தெரிவித்துள்ளார். இந்த விவகாரம் மனிதாபிமான கரிசனைகளின் அடிப்படையிலானது,இது தற்காலிகமாக தங்குவதற்கான அனுமதிதான் என்ற வாக்குறுதியை வழங்கியுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்

## 19ல் இருந்து மண்ணெண்ணெய்

மண்ணெண்ணெய் விநியோகம் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் தொடரும் என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். இன்று (10) பாராளுமன்றத்தில் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மண்ணெண்ணெய் விலையை திருத்துவது குறித்தும் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். கச்சா எண்ணெய் கப்பல் ஒன்று இம்மாதம் 13 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளது. இரண்டாவது கப்பலும் வரும் 29 ம் திகதி வர உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அதனடிப்படையில், எதிர்வரும் 15 ஆம் தேதி முதல் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை இயக்க 02

## காலி முகத்திடல் தற்காலிக கூடாரங்கள் அகற்றப்பட்டன

123 நாட்களாக காலி முகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கூடாரங்களை அகற்றுவதற்கு இன்று காலை முதல் போராட்டக்காரர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். கடந்த பல மாதங்களாக போராட்டக்களத்தில் அமைக்கப்பட்டிருந்த நூலகத்தையும் அகற்றுவதற்கு போராட்டக்காரர்கள் இன்று அதிகாலை நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர். காலி கோட்டாகோகம போராட்டக்களத்தில் தற்காலிக கூடாரங்கள் அகற்றப்படுவதை தடுக்குமாறு கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 04 மனுக்களும் இன்று மீளப்பெறப்பட்டுள்ளன.

## அரசாங்கத்தின் மொத்த செலவு 47,943 கோடியால் அதிகரிப்பு

65 இலட்சத்து 58 ஆயிரமாகும்.

இருப்பினும் திருத்தச் சட்டமூலத்தின்படி மொத்தச் செலவு 3 இலட்சத்து 27 ஆயிரத்து 587 கோடியே அறுபத்தைந்து இலட்சத்து 58 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. இதில் பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கே அதிகளவாக எழுபத்து மூவாயிரத்து நானூற்று அறுபத்தெட்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்கு ஆயிரத்து 344 கோடியே 51 இலட்சம் ரூபாயும் அதற்கு அடுத்ததாக நிதி அமைச்சுக்கு 46 ஆயிரத்து 720 கோடி ரூபாயும் பாதுகாப்பு அமைச்சுக்கு முப்பத்தேழாயிரத்து அறுநூற்று முப்பத்திரண்டு கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சுக்கு இருபதாயிரம் கோடி ரூபாயும் சுகாதார அமைச்சுக்கு 24 ஆயிரத்து 807 கோடி ரூபாயும் வர்த்தக அமைச்சுக்கு 937 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து அமைச்சுக்கு 37 ஆயிரத்து எழுநூற்று பத்து கோடி ரூபாயும் விவசாய அமைச்சுக்கு 13 ஆயிரத்து 856 கோடி ரூபாயும் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சுக்கு இரண்டாயிரத்து எழுநூற்று அறுபத்தேழு கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## கர்ப்பிணி பெண்களுக்கு..

நெருக்கடியானது பொது மருத்துவமனைகளில் பல அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ பொருட்கள் பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்த 2–3 மாதங்களில் அதிக மருந்துகளின் கையிருப்பு தீர்ந்து போய் விடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது தாய்வழி சுகாதாரம் மற்றும் கருத்தடைக்கான அணுகல் உள்ளிட்ட பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகளை வழங்குவதை கடுமையாக பாதிக்கின்றது. இந்நிலையில் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் பொருட்கள் இல்லாததால் 215,000 கர்ப்பிணிப் பெண்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம்.

அவர்களில் 11,000 பேர் இளம்பெண்களாவர் என்று ருதேீயு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. முன்னதாக ருதேீயு அமைப்பு, இலங்கையில் அவசர உதவிக்கு அழைப்பு விடுத்துள்ளதுடன், அடுத்த ஆறு மாதங்களில் 2 மில்லியன் பெண்கள் மற்றும் சிறுமிகளின் தேவைகளை அடைவதற்கு கூடுதலாக 10.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குமாறு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளது.

## 19ல் இருந்து மண்ணெண்ணெய்

உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அன்றைய தினத்தில் இருந்து இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு பின்னர் மண்ணெண்ணெய் தயாரிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அதன்படி, வரும் 19 ஆம் திகதி முதல் தொடர்ந்து மண்ணெண்ணெய் வழங்கும் நடைமுறை அமல்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மீராவோடையில் காய்த்து தொங்கும்




மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீராவோடை பிரதேசத்திலுள்ள தனியார் ஒருவரின் வளவினுள் பேரீச்சை மரங்கள் காய்த்துக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பிரதேசத்திலுள்ள பிரதான வீதியில் நடப்பட்டுள்ள பேரீச்சை மரங்கள் பூத்தும் காய்த்தும் இருப்பதை ஒவ்வொரு வருடம் பார்த்து வருகின்றோம். அந்தவகையில் இம்முறை மீராவோடை 04 ஹாஜியார் வீதியிலுள்ள வி.ரி.எம்.இர்ஷாத் என்பவரின் வீட்டில் நட்டப்பட்ட பேரீச்சைமரம் எட்டு வருடம் பராமரித்து வந்த நிலையில் மூன்றாவது வருடத்தில் காய்க்க தொங்கிய நிலையில் இம்முறை அதிகமாக பேரீச்சை காய்த்து உள்ளதுடன், இந்த பேரீச்சையின் விதைகள் அற்ற நிலையில் சிறியதாக காய்த்து தொங்குவதை அவதானிக்க முடிகின்றது.

மத்திய கிழக்கு நாடுகளில் அதிலும் விசேடமாக சவூதி அரேபியாவில் இருந்து தான் கூடுதலான பேரீச்சம்மரங்கள் காய்த்து உலகிற்கெல்லாம் பேரீச்சம் பழங்கள் கிடைக்கின்றது போல் மட்டக்களப்பு மாவட்டத்திலும் பேரீச்சம் பழங்கள் கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# பேத்தாழையில் காற்றினால் வீடுகளுக்கு தேசம்




**க.ருத்திரன்**

மட்டக்களப்பு கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள பேத்தாழையில் தற்போது வீசி வரும் கடும் காற்றினால் வளவினுள் நின்ற மரம் முறிந்து வீட்டின் மீது வீழ்ந்ததினால் வீட்டின் கூரைப் பகுதிகள் சேதமடைந்ததுடன் பொருட்கள் சிலவும் சேதமுற்றுள்ளன. நூலக வீதியில் வசித்து வரும் ந.ஜெயசக்தி என்பவரது வீடே இவ்வாறு சேதமடைந்துள்ளது. வீட்டினுள் உறங்கிக்கொண்டிருந்த குழந்தை மற்றும் குழந்தையின் தாய் ஆகியோர்கள் காயங்கள் எதுவுமின்றி அதிர்ஸ்ட வசமாக உயிர்தப்பியுள்ளனர். சேதமடைந்த தங்களது வீட்டின் கூரையை திருத்துவதற்கு வசதியற்ற நிலையில் அயலவர்களின் வீட்டில் படுத்துறங்குவதாக கவலை தெரிவித்தனர்.

மாவட்டத்தில் தற்போது வரட்சியுடன் கூடிய கச்சான் எனப்படும் காற்று கடும் வேகத்துடன் வீசுவதனால் வாழைமரங்கள் தென்னை போன்ற பலன் தரும் மரங்கள் முறிவடைவதுடன் வீட்டின் கூரைகளும் தூக்கி வீசப்படும் சம்பவங்கள் பிரதேசத்தில் இடம்பெற்று வருகிறது

# கல்முனை வலயகல்விப்பணிப்பாளராக நஜீம்




**நூருல் /ஹுதா உமர்**

கல்முனை வலய கல்வி பணிப்பாளராக அண்மையில் நியமிக்கப்பட்ட சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிவந்த எம்.எஸ் சஹுதுல் நஜீம் இன்று (10) தனது கடமைகளை கல்முனையில் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்று கொண்டார். கிழக்கு மாகாணகல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் ஆகியோரிடமிருந்து நியமன கடிதங்கள் கிடைக்க பெற்றிருந்த மருதமுனையை சேர்ந்த எம்.எஸ் சஹுதுல் நஜீம், இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரி ஆவார்.

கல்முனை மற்றும் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகங்களின் பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள், கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளர், கணக்காளர், வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள், கல்முனை கல்வி வலய அதிபர்கள், வலயக்கல்வி பணிப்பாளர் சஹுதுல் நஜீம் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பல முக்கியஸ்தர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

விஞ்ஞான பட்டதாரியான நஜீம் விஞ்ஞான முதுமாணி கல்வி முதுமாணிப் பட்டங்களை பெற்றுள்ளார் . 15 வருட கல்வி நிர்வாக சேவையிலுள்ள நஜீம் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளருக்கான நேர்முகப் பரீட்சையில் தேர்வாகி இந்த நியமனத்தை பெற்றுள்ளார். இவரது நியமனத்தை முன்னிட்டு வலயக்கல்வி அலுவலக வளாகத்தில் மரக்கன்றுகளும் நடப்பட்டது.

2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் தேதி இலங்கை கல்வி கல்வி நிர்வாக சேவையிலே இணைந்து கொண்ட அவர் , கடந்த 2019 மூன்றாம் மாதம் 12ஆம் தேதி தரம் 1 க்கு பதவி உயர்த்தப்பட்டார் .

சம்மாந்துறை வலயக் கல்விப்பணிமனைக்கு 2014 மார்ச் மாதம் மூன்றாம் தேதி நியமிக்கப்பட்டார் . சம்மாந்துறை வலயத்தில் அதி கூடிய 8 அரை வருடங்கள் சேவையாற்றி கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளராக பதவி ஏற்றுள்ளார் . நஜீம் மும்மொழியிலும் தேர்ச்சி பெற்ற ஒரு சிறந்த நிர்வாகி என்பது குறிப்பிடத்தக்கது .


“தேனாட்டில் கதிர்காமம் என புகழ்ந்து கூறும்
தாந்தாமலை சென்று சண்முகனை வழிபட்டால்
அல்லல்போம், தொல்வினைபோம் ஆன
செல்வமத்தனையும் இன்பமுடன் பெற்று இனிது வாழ்வாரே”
அனைத்து விதமான ஆலய வெண்கலப்பொருட்கள், வீட்டுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்
குணா மல்ரி சொப் மற்றும் உமா பென்சி ஹவுஸ்
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை



# தாந்தாமலை அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய

# வருடாந்த மகோற்சவப் பெருவிழா -2022

## திருக்கொடியேற்றம்
## 22.07.2022 வெள்ளிக்கிழமை

## தீர்த்தோற்சவம்
## 12.08.2022 வெள்ளிக்கிழமை

இலங்கை திருநாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் கிழக்கு மாகாணத்தில் மீன்இனங்கள் கவிபாடும் மட்டக்களப்பில் வந்தோரை வாவென்று அழைக்கும் மக்கள் வாழ்கின்ற தேசம் படுவான்கரையில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஒரு எல்லையிலும் அம்பாறை மாவட்டத்திற்கு அயலிலும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து 10மைல் கல் தொலைவில் காடும் காடுசார்ந்த பிரதேசமும், மலையும் மலைசார்ந்த பிரதேசமும், வயலும் வயல் சார்ந்த பிரதேச நிலமும் சூழ அமையப்பெற்றுள்ள இடமே தாந்தாமலை அங்கு எழுந்தருளி அருள் மழை சொரியும் முருகப் பெருமானின் கோயில் வரலாறு தொன்மை வாய்ந்தது. இவ்வாலயத்தின் வரலாறு கூத்திகன் - சேனன், உலகநாச்சி, ஆடகசௌந்தரி, குளக்கோட்டன், ஆகியோருடன் தொடர்பு பட்டு நிற்பதை வரலாற்றுச் சான்றுகளும், கர்ணபரம்பரைகதைகளும் சான்று பகிர்கின்றது. ஆதியில் ஆதிதிராவிடர்களின் மரவழிபாட்டுடன் தொடர்புடையதாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் வழிபாடும் திறந்த வெளிக்கோயிலாக தாந்தாமலையும் இருந்ததாக கர்ண பரம்பரைகதைகளூடாக அறியமுடிகின்றது. தாந்தாமலையின் உச்சியில் சிலந்தி மரம் ஒன்றும் அதனடியில் பிள்ளையார் ஒன்றும் இருந்தன என்பதை அறியக்கூடியதாகவுள்ளதோடு கதிர்காம க்ஷத்திரியர்களின் வழிபாட்டு தலமாக தாந்தாமலை இருந்துள்ளது. ஆடகசௌந்தரி ஆட்சி காலத்தில் தாந்தாமலை ஆலயத்தை தரிசித்ததாகவும் மாளிகை அமைத்து தங்கியும் இருந்ததாகவும் கர்ண பரம்பரை கதைகள் கூறுகின்றது இதற்குச் சான்றாக இன்றும் இராசதானி அமைந்திருந்த தடயங்களும் கற்றூண்களும் மற்றும் சிற்பவேலைப்பாடுகள் சிதைந்து அழிந்த கற்களும் காணக்கிடக்கின்றன. இப்பிரதேசம் மலையும் மலைசார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமுமாக உள்ளதால் அதிகளவான மக்கள் மழையை நம்பி விவசாயம் செய்கின்றனர் அதனடிப்படையில் மழை இல்லாத காலத்தில் மலைப்பிள்ளையாருக்கு பொங்கல் வைத்து பூசை செய்தால் மழை பொழிந்த இன்புற்ற வரலாறுகள் உள்ளதுடன் அது இன்றும் வழக்கத்தில் உள்ளதை காணமுடிகின்றது.

## 22.07.2022ம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக கிராம ரீதியான திருவிழாக்கள் நடைபெறும்

## 12.08.2022ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5மணிக்கு எம்பெருமானுக்குரிய புண்ணிய தீர்த்தோற்சவம் நடைபெறும்



**விளம்பர அனுசரணையாளர் : சோமசுந்தரம் சுரேஸ் (முனைக்காடு)**







# குச்சவெளி செம்பிமலை செம்பீஸ்வரர் கோயிலின் வரலாறும்

## இன்றைய நிலையும்.!





திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழர்களின் தொன்மைகளை வெளிப்படுத்தும் இடங்களில் ஒன்று தான் செம்பிமலை குச்சவெளிக் காட்டில் உள்ள இம்மலையில் பண்டைய காலத்தில் செம்பீஸ்வரர் எனும் சிவன் கோயில் இருந்தமை பற்றிய வரலாற்றுத் தகவல்களை அறியமுடிகின்றது.

திருகோணமலையிலிருந்து வடக்கு நோக்கி புல்மோட்டைக்கு செல்லும் வீதியில் சுமார் 34 கி.மீ தொலைவில் குச்சவெளி அமைந்துள்ளது. இங்கிருந்து தென்மேற்குப் பக்கமாக காட்டுப்பகுதிக்கு செல்லும் பாதை, சின்னக்கரைச்சி களப்பைக் கடந்து 9 கி.மீ உழவு இயந்திரத்தில் பயணிக்க வேண்டும் அப்பாதை குன்றும் குழியுமாக காணப்படுவதால் உழவு இயந்திரம் மற்றும் மோட்டார் வாகனங்களில் மட்டுமே செல்ல முடியும் மலை அடிவாரத்தில் இருந்து 1கி.மீ தூரத்தில் மலை உச்சியில் கோயில் காணப்படுகின்றது அங்கு சிதைவடைந்த படிக்கட்டுக்கள் அடர்ந்த காடுகளை கடந்து இக்கோயிலை அடைய முடியும்.

மலை அடிவாரத்தில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட சில பகுதிகள் காணப்படுவதோடு அங்கு ஒரு விகாரை ஒன்று காணப்படுகின்றது மலையடிவாரத்தில் இராணுவமுகாம் அமைக்கப்பட்டுள்ளது. செம்பிமலை சுமார் 150 மீற்றர் உயரமான ஓர் தட்டையான மலையாகும் வடக்கு தெற்காக நீண்டு கிழக்கு மேற்காக ஒடுங்கிய வடிவமைப்பை கொண்ட இம்மலை 750 மீற்றர் நீளமும் 250 மீற்றர் அகலமும் கொண்டது. மலையின் கிழக்குப் பக்கத்தில் இருந்து மலை உச்சிக்கு ஏறுவதற்கு கற்படிகள் காணப்படுகின்றன.

செம்பிமலை உச்சியில் 1938 ஆம் ஆண்டு பண்டைய சிவாலயம் இருந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டு அதன் சிதைவுகளுக்கு அருகில் மீண்டும் ஆலயம் கட்டப்பட்டு அங்கு சிவலிங்கமும், விநாயகரும் ஸ்தாபிக்கப்பட்டதாக அறியமுடிகின்றது. அன்று முதல் இவ்வாலயத்தில் பூஜைகள் நடைபெற்று வந்த நிலையில் யுத்த காலத்தின் போது யாரும் செல்லவில்லை இக்கால கட்டத்தில் பலவருடங்களாக பூஜை வழிபாடுகள் இன்றி இக்கோயில் காணப்பட்டது. இக்கட்டிடம் இன்று இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றது. தற்போது பௌர்ணமி தினங்கள் மற்றும் முக்கிய தினங்களின் போது மட்டும் மக்கள் செம்பீஸ்வரர் ஆலயம் வந்து பொங்கல் இட்டு பூஜை வழிபாடுகளை மேற்கொள்கின்றனர்.

இவ்வாலயம் எப்பொழுது தோன்றியது என குறிப்பிடப்பட முடியாவிட்டாலும் இச்சிவாலயத்தின் தோற்றம் பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. சோழர் ஆட்சிகாலத்தில் செம்பீஸ்வரர் ஆலயம் மிகவும் சிறப்புற்று இருந்ததாக அறியமுடிகின்றது.

1938.08.29 அன்று இக் கோயில் புனருத்தானம் செய்து மூலமூர்த்தியாக செம்பீஸ்வரர் எனும் சிவலிங்கம் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் மகிமையால் இவ்மலையை செம்பிமலை என்று அழைக்கப்படுகின்றது. இச்சிவலிங்கம் சோமேஸ்வ ரானந்த கிரி என்பவரால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது.



இவ்வாலயத்தில் 07 கேணிகள் உண்டு அதில் 06 கேணிகள் மட்டுமே பாவிக்கக் கூடியதாக உள்ளது. கோயிலானது மலையடிவாரத்திலிருந்து அதாவது இராணுவ முகாமில் இருந்து சுமார் 1கி.மீ மேல் தெலைவில் மலை உச்சியில் அழகான இடத்தில் அமைந்துள்ளது. கோயில் மண்டபத்துடன் வீடு போன்ற அமைப்பில் கதவுகள் சீர் இல்லாத நிலையில் ஓடுகள் உடைந்த நிலையில் பாழடைந்தும் காணப்படுகின்றது. இக் கோயிலின் இடப்பக்கம் சோமேஸ்வாரனந்த கிரியின் சமாதியும் காணப்படுகின்றது.


கோயிலின் மேற்குப் புறத்தில் படிக்கட்டுகளும் தெற்கு புறத்தில் இடித்த வரலாற்று எச்சங்களும் இரண்டு தூண்களும், கேணிகள், கல்வெட்டுகள் என்பன காணப்படுகின்றன.

7 கேணிகளில் 2 கேணிகள் கோயிலின் ஆரம்பத்தில் உள்ளன முதலாவது கேணியில் மக்கள் நீராடி கோயிலிற்கு செல்வார்கள் ஆனால் இரண்டாவது கேணியில் இருந்தே கோயிலுக்கு தேவையான தீர்த்தங்கள், அபிஷேகங்கள், நெய்வேத்தியம் போன்றவற்றுக்கான நீர் எடுக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது.

ஆலய நிர்வாகம் இரண்டு வருடத்துக்கு ஒருமுறை மாற்றப்பட்டு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படுகின்றது. ஆலயத்தின் வலது பக்கத்தில் (வடக்குப் பக்கம்) பாறையின் மீது பண்டைய ஆலயத்தின் சிதைவுகள் காணப்படுகின்றன தூண் தாங்கும் குழிக்கற்கள், உயரமான மற்றும் கட்டையான தூண்கள், பீடக்கற்கள் ஆகியவை காணப்படுகின்றன. இவ்விடத்திற்கு சற்று பள்ளத்தில் மேலும் சிலதூண் தாங்கம் கற்தூண்களும் உள்ளன. இதன் மூலம் தமிழரின் நீண்ட வரலாறு காணப்படுகின்றது.

இத்தனை பழமை வாய்ந்த தொல் பொருள் சின்னங்கள் உள்ள இடத்தில் சிவாலயத்தை பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும். இவ் ஆலயத்தை மீண்டும் புனரமைப்பதற்கு இந்து அமைப்புக்கள் முயற்சி எடுக்க வேண்டும் இது காலத்தின் வரலாற்று தேவையாகும்.

(அ.அச்சுதன்)







## அம்பாறை மாவட்டத்தில் தலை தூக்கியுள்ள

# மாட்டிறைச்சி அரசியல்!



நாட்டில் இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக மூச்சிவிடுவதாக இருந்தால் கூட சாதாரண ஒருவருக்கு தினம் 5000 ரூபாய்க்கு மேல் தேவை எனும் நிலை உருவாகி யுள்ளது. அதில் பல்வேறு மாபியாக்களும், மனசாட்சி இல்லாதவர்களின் செயலும் அதிகமாக ஆதிக்கம் செலுத்துகிறது. இப்படியான பெரும் மாபியா கடலிலிருந்து ஒரு துளியை பிரித்தெடுத்தது போல அம்பாறை மாவட்டத்தில் சில நாட்களாக பேசுபொருளாக மாறியிருக்கும் இறைச்சி விலை பிரச்சினையை ஆராய்ந்தால் பல்வேறு இடியப்ப சிக்கல்களையும், அதிகார வர்க்கத்திற்கு வர்த்தகர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகளையும் காணக்கூடியதாக உள்ளது.

### கல்முனை முதல்வரின் அறிக்கைக்கு கடையை மூடிய இறைச்சி கடைக்காரர்கள்

சொந்தமான விலங்கறுமனையையோ அல்லது சொந்தமான இறைச்சிக்கடைகளையோ கொண்டிராத கல்முனை மாநகராட்சி இந்த இறைச்சி விலையை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. அதன் பகுதியாக கல்முனை மாநகராட்சி ஆள்புல எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் ஒரு கிலோ மாட்டிறைச்சியின் அதிகூடிய கட்டுப்பாட்டு விலையாக 1,600 ரூபாவை கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றக்கீப் நிர்ணயித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள மாநகர சபை தரப்பு நாட்டின் அசாதாரண சூழ்நிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, கல்முனை மாநகர பிரதேசங்களில் ஒரு கிலோ மாட்டிறைச்சி 2,200 ரூபாய்க்கு மேல் விற்கப்படுவதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கமைய மேற்படி கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2022.08.06 தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில், இந்த நிர்ணய விலையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருகின்றனர். இவ்விடயம் தொடர்பாக கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் மாநகர மேயரால் மாநகர சபைக்கு நேரடியாக அழைக்கப்பட்டு, இறைச்சி வியாபாரத்தின்போது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் செலவீனங்கள் குறித்து கேட்டறியப்பட்டு, அவற்றுக்குரிய தீர்வுகள் முன்மொழியப்பட்ட நிலையில், அவர்களது இணக்கத்துடன் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஒரு கிலோகிராம் மாட்டிறைச்சி 1,600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும் அதில் ஆகக் கூடியது 200 கிராம் மாத்திரமே முள் அடங்கியிருத்தல் வேண்டும் எனவும் அனைத்து இறைச்சிக் கடைகளிலும் டிஜிட்டல் தராசு பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதனை மீறும் மாட்டிறைச்சி வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், மாட்டிறைச்சிக் கடைக்கான வியாபார உரிமம் இரத்துச் செய்யப்படும் எனவும் கல்முனை முதல்வரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதே வேளை, இறைச்சிக் கடைக்காரர்களுக்கு மாடுகளை விற்பனை செய்வோர் மாநகர சபையில் தம்மைப் பதிவு செய்து, அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் ஒரு கிலோ இறைச்சியை ஆகக் கூடியது 1,300 ரூபாய்க்கு வழங்க வேண்டும் எனவும் மேயரால் உத்தரவிடப்பட்டிருக்கின்றது. இதனை மீறும் மாட்டு வியாபாரிகள் பொலிஸார் மூலம் கைது செய்யப்பட்டு, கடுமையான சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன், மாடுகளும் பறிமுதல் செய்யப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



நூருல் ஹுதா உமர்

ஆனால் இம்மாதம் 05ம் திகதிவரை 2000- 2200 ரூபாய் வரை கல்முனை மாநகர எல்லைக்குள் இறைச்சி விற்கப்பட்டதுடன் 06ம் திகதி முதல் பெரும்பான்மையான இறைச்சி கடைகள் முதல்வரின் அறிவிப்பின் காரணமாக மூடப்பட்டுள்ளது. கடைகளை மூடியமைக்கு காரணமாக இறைச்சி கடைகளில் மேயரினால் குறிக்கப்பட்டுள்ள விலைக்கு இறைச்சியை விற்க முடியாது என்கின்றனர் இறைச்சி கடைக்காரர்கள். இறைச்சி விலை ஏன் அதிகரிக்கின்றது என்ற கேள்விக்கு விடை தேட வேண்டியது இறைச்சிக்கடைக்காரர்களைத் தாண்டி இறைச்சிக்கடைகளைக் குத்தகைக்கு விடுவோரின் கைகளிலும் தங்கியுள்ளது என்பதனை ஒரு கனம் புரிந்துகொள்ள வேண்டும். பல லட்ச ரூபாய்களுக்கு கடைகளைக் குத்தகைக்கு விட்டால் நாளுக்கொரு விலையை அவர்களும் அதிகரிப்பதில் நியாயமும் இல்லாமல் இல்லை. அவ்வாறான தொகைக்குக் குத்தகைக்கு விட்டுவிட்டு விலையைப்பற்றிப் பேசுவதில் நியாயமும் இல்லை. அவ்வாறான பெருந்தொகைக்குக் குத்தகைக்கு பெறும் அவர்கள் அவர்களது வாழ்வாதாரம், இலாபம், அடுத்த முறை குத்தகைக்குப் பெறுவதற்கான பணத்தினை சேகரித்தல் போன்ற விடயங்களில் கவனஞ்செலுத்துவதால் விலை அதிகரிப்பு ஏற்படுகின்றதே தவிர இங்கு டொலர் தட்டுப்பாட்டிற்காக விலை அதிகரிக்கப்படுவதில்லை. இந்நிலையில் மாற்றம்பெற வேண்டுமானால் முதலில் குத்தகையை நிர்ணயம் செய்து குறிப்பிட்ட ஒரு சிறு தொகைக்குக் குத்தகைக்குக் கடையை வழங்கி விட்டு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்தால் மக்களும் கடையைக் குத்தகைக்கு எடுத்தவரும் நன்மையடைவார்கள் என்பதில் ஐயமில்லை. மக்களின் வயிற்றில் அடித்து கட்டிடங்களை கம்பீரமாகக் காட்சிப்படுத்தி என்ன பயன்? மாற்றத்தை எதிர்பார்க்கும் நம்மிடமிருந்து முதலில் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்ற நியாயமான கருத்தொன்று பொதுவெளியில் இந்த பிரச்சினைகளின் பின்னர் உலவுகிறது.

இறைச்சி விலை நிர்ணயத்தில் பிராந்தியத்தின் அனைத்து உள்ளூராட்சி சபைகளும் ஒருமித்த ஒரு விலை நிர்ணயத்திற்கு வரவேண்டும். கல்முனையில் ஒரு விலை, அக்கரைப்பற்றில் ஒரு விலை, நிந்தவூரில் ஒரு விலை, அட்டளைச்சேனையில் ஒரு விலையும் சம்மாந்துறையில் ஒரு விலையும் இருக்கக்கூடாது. இதனால் கடந்த காலங்களில் மாட்டு வியாபாரிகளுக்கும் இறைச்சிக்கடைக்காரர்களுக்கும், உள்ளூராட்சி சபைகளுக்கும் இடையில் இணக்கப்பாடு இன்மையும், தான்தோன்றித்தனமான விலை அதிகரிப்பும் காணப்பட்டது. எனவே சபைகள் ஒன்றினது இறைச்சி விற்பனையுடன் சம்மந்தபட்ட மாட்டு வியாபாரிகள், கடைகாரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிராந்தியத்திற்கான ஓர் விலை நிர்ணயம் செய்யுங்கள். இது இறைச்சிக்கு மட்டுமல்ல மீன் வியாபாரத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டும். செல்வமீன்-1000/= மேல், வெட்டு மீன்-2400/= மேல், ஒரு வேக் 100/= ரூபாக்கு வாங்கிய சாலை மீன் 1000/=, கீரி 1400/= தவிர கடல் மீனுக்குதான் எரிபொருள் தட்டுப்பாடு என்றால் ஆற்று மீனுக்கும் இந்த நிலைதான் என்கின்றனர் நுகர்வோர். கோழி இறைச்சிக்கும் இதுதான் நிலைமை.

மாட்டிறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்து, அதனை இறுக்கமாக அமுல்படுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகளில் இருந்து தான் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை. 2022.08.06 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் இதனை அமுல் நடத்துவதற்கு மாட்டிறைச்சி வியாபாரிகள் இணக்கம் தெரிவித்திருந்தனர். ஆனாலும் குறித்த தினத்திலிருந்து பெரும்பாலான இறைச்சிக் கடைக்காரர்கள் இறைச்சிக் கடைகளை திறக்காமல், வியாபாரத்தை நிறுத்தியுள்ளனர். இன்னும் சில நாட்களுக்கு இந்நிலை தொடரலாம். உண்மையில், நிர்ணய விலைக்கு இறைச்சியை விற்காமல், தமது தீர்மானத்தை மீறும் இறைச்சிக் கடைகளை இழுத்து மூடுவதற்கு முதல்வர் தயாராக இருந்தார். அதற்காக 06ஆம் திகதி சனிக்கிழமையன்று காலை வேளையில் பொலிஸ் மற்றும் மாநகர சபை உத்தியோகத்தர்கள் சகிதம் முதல்வர் கள விஜயம் மேற்கொண்டு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடாகியிருந்தது. ஆனால் வியாபாரம் நடத்தாமல் கடைகளை அவர்களாகவே மூடியிருந்தமை முதல் வெற்றியாகும் என கல்முனை மாநகர சபை விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை எனும் கதையை பக்குவமாக எடுத்துரைத்தது. இவைகளெல்லாம் இப்படி இருக்க இந்த விடயம் தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை (09) கல்முனை முதல்வரின் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கல்முனை பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எல்.ஏ.வாஹிட், மாநகர சபை கணக்காளர் எம்.எம்.ரியாஸ், கால்நடை வைத்திய அதிகாரி வட்டப்பொல உட்பட இறைச்சிக் கடைக்காரர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு நீண்ட நேர வாதப்பிரதிவாதங்களை மேற்கொண்டதுடன் 01 கிலோ மாட்டிறைச்சி (200 கிராம் எலும்பு அடங்கலாக) 1700 ரூபாவுக்கும் தனி இறைச்சி 1900 ரூபாவுக்கும் விற்பனை செய்வதற்கும் இணக்கம் காணப்பட்டது.



மிகுதி 06 ஆம் பக்கம் பார்க்க...



# அம்பாறை மாவட்டத்தில் தலை தூக்கியுள்ள மாட்டிறைச்சி அரசியல்!

இதன்மூலம் கல்முனை முதல்வரின் ஆளுமை வெளிப்படையாக வெளிச்சத்துக்கு வந்துள்ளது. கல்முனையை ஆளும் தரப்பு மாநகர சபை உறுப்பினர் ஏ.ஆர். அமீர் 'நாங்க சும்மா பகடிக்கி சொல்றதையெல்லாம் நீங்க நம்புறானா- நாங்க எவ்வளவோ தீர்மானங்களை எடுத்திரிக்கின்றோம் ஏதாவது நடந்திரிக்கா'என தனது சமூக வலைத்தள பக்கத்தில் இதுதொடர்பில் பகிரங்கமாகவே கிண்டல் செய்துள்ளார்.

## இறைச்சி வியாபாரத்தில் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள்

பொதுமக்கள் பொறுமையுடன் ஒத்துழைப்பு வழங்கினால் இறைச்சிக்கடைக்காரர்களை வழிக்குக் கொண்டு வந்து விடலாம் என கல்முனை மாநகர சபை நம்புவதாக தெரிவிக்கப்படுவதுடன் 01 கிலோ மாட்டிறைச்சி 1600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும். அதில் ஆகக்கூடியது 200 கிராம் மாத்திரமே எலும்பு அடங்கியிருத்தல் வேண்டும், தனி இறைச்சியாயின் 01 கிலோ கிராம்- 1800 ரூபாவுக்கே விற்கப்பட வேண்டும், அனைத்து இறைச்சிக் கடைகளிலும் டிஜிட்டல் தராசு பயன்படுத்தப்பட வேண்டும் என மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் பிரிவு 272 (8)(gg) இன் பிரகாரம் மாநகர முதல்வருக்கு உரித்தான அதிகாரத்தின் கீழ் இத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பொது மக்களின் நலன் கருதி எடுக்கப்பட்ட இத்தீர்மானங்களில் எவ்வித விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை. இதனை அமுல்படுத்துகின்ற விடயத்தில் மாநகர முதல்வர் மிகவும் உறுதியுடன் இறுக்கமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார் என்று அறிவிக்கப்பட்டு பின்னர் அதில் தளர்வை கல்முனை முதல்வரே மேற்கொண்டுள்ளார்.

அக்கரைப்பற்று மாநகர சபை எல்லையினுள் நிர்ணய விலைகளிலேயே மாட்டிறைச்சி விற்கப்படுவதை அப்பகுதி வியாபாரிகள் அக்கரைப்பற்று மாநகர சபைக்கு உறுதிப்படுத்தியிருக்கின்றனர். அதேவேளை, அட்டாளைச்சேனையில் இவ்விலையை நடைமுறைப்படுத்த அங்குள்ள மாட்டிறைச்சி வியாபாரிகள் தவறியமையால், அப்பிரதேச சபை சபைத் தவிசாளரினால் அப்பகுதி விலங்கறுமனை இழுத்து மூடப்பட்டிருக்கிறது. ஆனாலும் துரதிஷ்டவசமாக இழுத்து மூட மாநகர சபைக்கு சொந்தமான விலங்கறுமனையோ மாநகர சபைக்கு சொந்தமான இறைச்சிக்கடைகளோ கல்முனையில் இல்லை என்பதே இங்கு கவலையான விடயமாக உள்ளதுடன் கல்முனை மாநகர இறைச்சிக்கடைக்காரர்கள் தமது எண்ணம் போலவே இதுவரையும் வியாபாரம் செய்து வருகின்றனர். தனியார் ஒருவருக்கு சொந்தமான விலங்கறுமனைக்கு எதிராக வழக்கொன்றை பதியுமாறு கல்முனை நீதிமன்றம் ஆணையாளரை பணித்திருந்தும் அதனை கூட நிறைவேற்ற முடியாமல் காலம் இழுத்தடிக்கும் கல்முனை மாநகரசபை நிர்வாகம் இறைச்சி விலையில் உச்சகட்ட இறுக்கம் காட்ட முடியாது இருக்க பல காரண காரியங்கள் இருக்கிறது.

## பொய்யும், இயலாமையும் நிறைந்த தீர்மானங்கள்

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மாட்டிறைச்சி விற்பனையாளர்கள், கடந்த 03 ஆம் திகதி மாநகர சபைக்கு அழைக்கப்பட்டு, இறைச்சி வியாபாரத்தின் போது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆராயப்பட்டு அவற்றுக்குரிய தீர்வுகள் முதல்வரினால் முன்மொழியப்பட்ட நிலையில் அத்தீர்மானங்களை மீறும் மாட்டிறைச்சி வியாபாரிகள் மீது மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் பிரிவு 272 (= (c-),(d) இன் கீழ் குறித்த மாட்டிறைச்சிக் கடைகள் உடனடியாக இழுத்து மூடப்படும் எனவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மாட்டிறைச்சிக் கடைக்கான வியாபார உரிமம் இரத்துச் செய்யப்படும் எனவும் முதல்வரினால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. மாட்டிறைச்சி வியாபாரிகளுடனான குறித்த கலந்துரையாடலில், அவர்களினால் தெரிவிக்கப்பட்ட செலவீனங்கள் தொடர்பாக சம்மந்தப்பட்ட தரப்பினருடன் ஆராய்ந்தபோது, அவை மிகைப்படுத்தப்பட்டவை என தெரிய வந்துள்ளது. குறிப்பாக மாடு விற்பவர்கள், தங்களுக்கு ஒரு கிலோ கிராம் இறைச்சியை எலும்புடன் சேர்த்து 1700 ரூபாவுக்கே தருகிறார்கள் என இறைச்சிக்கடை வியாபாரிகள் கூறியிருந்தனர். அப்போது இவ்விலையைக் குறைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக முதல்வர் உறுதியளித்ததன் பிரகாரம் வெள்ளிக்கிழமை (05) மாடு வியாபாரிகளை, மாநகர சபைக்கு அழைத்து, பேச்சுவார்த்தை நடாத்தினார். இதன்போது, தாம் மாட்டிறைச்சிக் கடைக்காரர்களுக்கு கிலோவொன்று 1500 ரூபாப்படியே விற்பதாகவும் அத்தொகைக்கு மேல் அவர்கள் வாங்க மாட்டார்கள் எனவும் ஒவ்வொரு மாட்டிலும் 04 சந்துகள் மாத்திரமே நிறுக்கப்பட்டு, மாட்டுக்கான தொகை தீர்மானிக்கப்படுவதாகவும் ஈரல், குடல் மற்றும் இதர பகுதிகள் யாவும் இறைச்சிக் கடைக்காரர்களுக்கு இலவசமாகவே கிடைக்கின்றன எனவும் மாடு வியாபாரிகள் சுட்டிக்காட்டியிருந்தனர். இவற்றின் மூலம் இறைச்சி வியாபாரிகளுக்கு 10,000 ரூபா முதல் 15,000 ரூபா வரை மேலதிக வருமானம் கிடைக்கிறது எனத் தெரிய வந்துள்ளது.



ஆக, உண்மைகள் மறைக்கப்பட்டு, செலவீனங்கள் அதிகமாகக் காட்டப்பட்டே மாட்டிறைச்சி வியாபாரத்தில் கொள்ளை இலாபம் அடிக்கப்படுகின்றமை நிரூபிக்கப்பட்டுள்ளதால், இந்த மாபியாவை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது என்றும் இந்த விடயத்தில் எத்தகைய விமர்சனங்கள், சவால்கள் வந்தாலும் அவற்றை முறியடித்து ,மக்களுக்கு நியாய விலையில் மாட்டிறைச்சி கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு மாநகர முதல்வர் அதீத பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றார். இந்த விடயம் சம்மந்தமாக கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளுடனும் அம்பாறை மாவட்டத்திலுள்ள ஏனைய சில உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களுடனும் முதல்வர் பேசியிருப்பதுடன் அவர்களது ஒத்துழைப்பும் கிடைக்கப் பெற்றுள்ளது. ஆகையினால், தீர்மானிக்கப்பட்ட விலைகளுக்கு இறைச்சி விற்பதற்கு வியாபாரிகள் முன்வராத வரை மாட்டிறைச்சிக் கடைகளை திறப்பதற்கோ வேறு வழிகளில் மாட்டிறைச்சி விற்பதற்கோ அனுமதி வழங்கப்பட மாட்டாது. இதனால் இன்னும் சில தினங்களுக்கு நுகர்வோருக்கு இறைச்சி கிடைக்காமல் போகலாம். இது விடயத்தில் சகிப்புத்தன்மையுடன் பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் இந்த மாபியாவை முறியடிக்கும் சவாலை ஒன்றிணைந்து வெற்றி கொள்வோம் என்கிறது கல்முனை மாநகர சபை.

## அக்கரைப்பற்றில் நடக்கும் இறைச்சி வியாபாரம்

அக்கரைப்பற்று மாநகர எல்லைக்குள் அதிக விலைக்கு மாட்டிறைச்சி விற்பனை செய்யப்படுவதாக வந்த விமர்சனங்களை கருத்தில் கொண்டு, மாட்டிறைச்சி விற்பனையாளர்களுடனான சந்திப்பொன்று அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதா உல்லா அஹமட் சகி தலைமையில் மாநகர சபையில் இடம்பெற்றது. இதில் அதிக விலைக்கு மாட்டிறைச்சி விற்பனை செய்யப்படுவதாக வந்த குற்றச்சாட்டை விற்பனையாளர்கள் முற்றாக மறுத்தனர். மேலும் , ஒரு கிலோ இறைச்சி (இறைச்சி 800g + முள்ளு 200ஞ்) 1600/- ரூபாய்க்கும் , தனி இறைச்சி 1800/- ரூபாய்க்கும் தொடர்ந்தும் விற்பனை செய்வதாகவும் உறுதியாக கூறினர். இருந்தாலும் , ஒரு சில சம்பவங்கள் இடம்பெற்றிருக்க வாய்பிருக்கலாம் என்பதையும் , பொருளாதார நெருக்கடி நிலையையும் கருத்தில் கொண்டு மாநகர மக்களின் நலனுக்காக தொடர்ந்தும் மாநகர சபை இவ்விடயத்தில் மிகவும் கண்காணிப்புடன் நடந்து கொள்ளும் என்பதை மாநகர மக்களுக்கு அக்கரைப்பற்று மாநகர சபை தெரிவித்திருந்தது.

அக்கரைப்பற்று மாநகர சபை எல்லைக்குட்பட்ட இறைச்சி கடைகளின் விற்பனை நடைமுறைகள் குறித்து ஆராயும் நோக்கிலான திடீர் கள விஜயமொன்றினை அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்தார். இதில் டிஜிட்டல் அல்லாத சாதாரண தராசுகள் பாவித்த ஒரு சில இறைச்சி கடைக்காரர்களின் தராசுகள் மாநகர சபையினரால் பறிமுதல் செய்யப்பட்டதுடன், சட்ட விரோதமான முறையில் கடைகளும் இனம் காணப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், இக்கள விஜயத்தின் போது ஒரு சில இறைச்சி கடைகளில் தீர்மானிக்கப்பட்ட விலை நிர்ணயம் மற்றும் விலைப் பட்டியலை பேணாதவர்களுக்கும் அக்கரைப்பற்று மாநகர முதல்வரால் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மாநகர சபை முதல்வரின் தலைமையில் மாநகர சபையினருக்கும்- பிரதேச மாட்டிறைச்சி விற்பனையாளர்களுக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் எட்டப்பட்ட தீர்மானத்திற்கமைய பொதுமக்களுக்கு சரியான முறையில் இறைச்சி விநியோகம் இடம்பெறுகிறதா என்பதை கண்காணிக்கும் அடிப்படையில் இத்திடீர் விஜயம் அமைந்தது இக்கள விஜயத்தின் போது மாநகர சபை உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.



இதன் தொடர்ச்சியாக கடந்த செவ்வாய்க்கிழமை (09) அக்கரைப்பற்று மாநகர சபையின் விலை நிர்ணய தீர்மானத்திற்கு மாற்றமாக செயல்பட்ட இறைச்சிக்கடை முதல்வரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அதிகாரிகளால் இழுத்து மூடப்பட்டது. மக்களின் வேண்டுகோளுக்கு அமைய அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் இறைச்சிகடைகள் தொடர்சியாக இருந்ததால் ஒரு விற்பனையாளர் 800ஞ் + 200ஞ் என்ற முறை இருக்க வேண்டும் என்ற போதும், சுமார் 600ஞ் இறைச்சி 400ஞ் முள்ளுடன் விற்பனை செய்ததை ஆதார பூர்வமாக நிரூபித்ததன் பின் அக்கடை இழுத்து மூடப்பட்டுள்ளது. ஏனைய இறைச்சி விற்பனை நிலையங்களும் தொடர்ந்தும் கண்காணிக்கப்படும் என்பதை மாநகர மக்களுக்கு அறியத்தருவதோடு பொதுமக்களும் உரிமையுடன் உங்களின் பணத்திற்கு ஏற்ற பொருளை கேட்டு பெற்றுக்கொள்ள தயங்கக்கூடாது என்றும் , அக்கரைப்பற்று முதல்வர் மாநகர மக்களை அறிவுறுத்தியுள்ளார்.

## பிரதேச சபைகள் என்ன செய்கிறது

அம்பாறை மாவட்ட காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, இறக்காமம், சம்மாந்துறை, நாவிதன்வெளி, பொத்துவில் போன்ற பிரதேச சபைகளிலும் இந்த மாட்டிறைச்சிக்கான நிர்ணய விலை இல்லாத பிரச்சினை தொடர்கிறது. மாட்டிறைச்சி விலையில் மாநகர சபைகளினால் மாற்றம் கொண்டுவர முடியுமானால் அதே போன்று ஏனைய மாவட்டங்களிலுள்ள பிரதேச சபைகளினால் மாற்றங்கள் கொண்டு வந்து குறைந்த விலைகளில் மாட்டிறைச்சி விற்கப்படும் போது ஏன் அம்பாறை மாவட்ட பிரதேச சபைகளின் பிரதேசத்தில் மாத்திரம் கண்முடித்தனமாக இறைச்சி விற்பனை செய்யப்படுகின்றது ஏன் இதுவரை பிரதேச சபைகள் கவனம் கொள்ளாமல் இருப்பதன் காரணம் என்ன? இனியாவது பிரதேச சபைகள் இதனை கவனம் கொள்ளுமா? எனும் கேள்விகள் பரவலாக எழ ஆரம்பித்துள்ளது. இதனடிப்படையில் அட்டாளைச்சேனை மற்றும் இறக்காமம் பிரதேச சபைகள் பலகட்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர் மாட்டிறைச்சி விலையில் ஒரு நிர்ணயத்தை முன்மொழிந்துள்ளது. அட்டாளைச்சேனை பிரதேச சபையின் அறிவுறுத்தல்களை மீறி, அதிக விலைக்கு மாட்டிறைச்சி விற்பனை செய்தால் கொல்களத்தை மூடுவதாக தவிசாளர் தெரிவித்துள்ளதுடன்

ஒரு கிலோ மாட்டிறைச்சியை 1600 ரூபாவுக்கு விற்பனை செய்வதாக மாட்டிறைச்சிக் கடைக்காரர்கள் உத்தரவாதமளித்தால் மட்டுமே, மாடறுக்கும் இடம் திறந்து கொடுக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார். இப்படியான உடும்புப்பிடி அறிவிப்புக்களின் உறுதிப்பாடும், மாநகரசபைகளினதும் பிரதேசசபைகளினதும் முன்மொழிவுகளின் சாத்தியப்பாடுகளும் நீண்ட காலத்திற்கு நிலைக்குமா என்பதை காலமே கூற வேண்டும்.

# இலங்கை தேசிய அணிக்கு கிண்ணியாவில் மூவர் தெரிவு



**எப்.முபாரக்**

இலங்கையில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 05 தொடக்கம் 14ம் திகதி வரை நடைபெறவுள்ள தேசிய 07 வது போட்டியில் இலங்கையின் 17 வயதுக்குட்பட்ட தேசிய அணிக்கு அல் அக்ஸ ா தேசிய பாடசாலையில் இருந்து மூன்று மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் ஏ.எம்.சம்மி தரம்11), எம்.எஸ்.எம்.முபாஸ் தரம்(10),மற்றும் கே.எம்.ஹிப்னி தரம்(தரம்10) ஆகிய மூன்று மாணவர்களுமே தேசிய போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட 03 மாணவர்களுக்கும் கிண்ணியா சமூகம் சார்பாகவும், கிண்ணியா இளைஞர்கள் சார்பாகவும்,கிண்ணியா இளைஞர் கழக சம்மேளனம் சார்பாகவும் வாழ்த்துகளை தெரிவிக்கின்றனர்.

# கைப்பணி பொருட்கள் உள்ளடங்களான கண்காட்சி



**ஹஸ்பர்**

கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் ஏற்பாடு செய்த தையல் பயிற்சி நெறி மாணவர்களின் கண்காட்சி தம்பலகாமத்தில் இடம் பெற்றது. தம்பலகாமம் புதுக்குடியிருப்பு மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நேற்று (09) இடம் பெற்ற இக் கண்காட்சி நிகழ்வில் தையல் பயிற்சி மாணவிகளினால் தயாரிக்கப்பட்ட கைப்பணி பொருட்கள்,ஆடை உற்பத்தி என பல பொருட்கள் இதன் போது காட்சிப்படுத்தப்பட்டன.

இதில் கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் என்.தனஞ்செயன் ,தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி,உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.பத்மராஜா,கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.பர்ஹானா,குச்சவெளி பிரதேச செயலக பதில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.செந்தூரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கற்றல் ஏடுகள் வழங்கி வைப்பு



**நூருல் /ஹுதா உமர்**

அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பு "மாணவர் மகிமை" வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான இலவச கற்றல் ஏடுகள் கையளிக்கும் நிகழ்வு இன்று இடம்பெற்றது

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக பாதிக்கப்படும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு கரம் கொடுக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ் 2022 கல்வியாண்டில் மாணவர்களுக்கு இதுவரை கிடைக்கப் பெறாத பாடநூல்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதற்கமைய கல்வி வெளியிட்டு திணைக்களத்தில் இருந்து குறைவாக கிடைக்கப் பெற்ற தரம் 5 ஆங்கில பாட நூல்கள் மற்றும் தரம் 2 கணிதம் செயல்நூல் ஆகிய பாடப் புத்தகங்கள் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பினால் பிரதி செய்யப்பட்டு புத்தகங்களாக மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன

நிந்தவூர் கமுஃ கமுஃ அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலய அதிபர் எஸ் ரகுநாதன் தலைமையில் நடைபெற்ற வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் தலைவர் ஐ எம் நிஸ்மி, அமைப்பின் செயலாளர் ஏ புஹாது, ஆகியோரும் கலந்து கொண்டு பாட நூல்களை கையளித்து வைத்தனர்

# அட்டப்பள்ளத்தில் இரு மாணவர்கள் சாதனை



**( காரைதீவு சகா)**

கல்முனை வலயத்தில் மிகவும் பின்தங்கிய அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலய மாணவர்கள் இருவர் மாவட்ட மட்டத்தில் பங்குபற்றி 2022 மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 12 வயதிற்குட்பட்ட நீளம் பாய்தல் போட்டியில் து.பவிக்ஸா 1ம் இடத்தையும்
14 வயதிற்குட்பட்ட குண்டுபோடுதல் போட்டியில் ச.டோஜித் 2ம் இடத்தையும் பெற்று சாதனை படைத்து உள்ளனர்.

மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வில் அதிபர் ச.ரகுநாதன், பிரதிஅதிபர், த.நடேசலிங்கம் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் த.ம.றிஸ்மி ஆகியோர் காணப்படுகின்றனர். இப் பாடசாலையில் விளையாட்டு மைதானம் இல்லை, கல்முனை கல்வி வலயத்தில் உள்ள அதிகஷ்ரப்பிரதேச பாடசாலை.பயிற்றுவிப்பாளரின் அயராதமுயற்சி வெற்றிக்கு காரணம் என அதிபர் ச.ரகுநாதன் தெரிவித்தார்.

# கலைஞர்களுக்கான மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பன்னிரண்டு மாத விளக்கு வேலை திட்டத்தின் கீழ் கலைஞர்களுக்கான மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தில் இன்று புதன்கிழமை நடைபெற்றது. பிரதேச செயலாளர் எஸ்.எச். எம்.முஸம்மில் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.பீர்முஹம்மது, கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி.எஸ்.திலிபா, திருமதி.ஜே. ரதிதேவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பிரிவிலுள்ள பிரதேச கலைஞர்களுக்கு மூன்று மரக்கன்றுகள் வீதம் மா, கொய்யா, தோடை பழமரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டது.

# புலம்பெயர் உறவுகள் இதய சுத்தியுடன் பங்களிப்பு

**நூருல் /ஹுதா உமர்**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூட்டுறவு துறை மூலமாக எமது மக்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு நெதர்லாந்து, கனடா, சுவிஸ், அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழ் உறவுகள் மிக காத்திரமான பங்களிப்புகளை இதய சுத்தியுடன் வழங்கி வருகின்றனர் என்று கல்முனை அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுற சங்க சமாசங்களின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.



காரைதீவில் சுய தொழில் முயற்சியாளர்களுடன் கடந்த ஒரு மாதமாக பல சந்திப்புகளை மேற்கொண்டு வேலை திட்டங்கள் குறித்து ஆராய்ந்து வருகின்ற லோகநாதன் ஊடகங்களுக்கு தெரிவித்தவை வருமாறு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் கூட்டுறவு துறை பிரகாசிக்கின்றது. அங்கு உள்ள மக்கள் கூட்டுறவு துறையின் நன்மைகளை அனுபவிக்க கூடியதாக இருக்கின்றது. இந்நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூட்டுறவு துறை மூலம் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த புலம்பெயர் உறவுகள் அர்ப்பணிப்புடன் முன்வந்து உள்ளார்கள். ஏராளமான வேலை திட்டங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புலம்பெயர் உறவுகளின் நிதி பங்களிப்புகளுடன் முன்னெடுக்கப்பட்ட வண்ணம் இருக்கின்றன.

அரசாங்கத்திடம் நாம் நிதி கேட்கவில்லை. தார்மீக ஆதரவை அது வழங்கினால் போதும். அதற்காக அரசாங்க அலுவலகங்கள் தூங்கி கொண்டிருப்பதை அனுமதிக்க முடியாது. அம்பாறை மாவட்டத்தை பொறுத்த வரை நாவிதன்வெளி, சொறிக்கல்முனை, பாண்டிருப்பு, கல்முனை, மல்லிகைத்தீவு என்று பல பிரதேசங்களிலும் வேலை திட்டங்களை ஆரம்பித்து இருக்கின்றோம். அடுத்த வேலை திட்டத்தை காரைதீவில் முன்னெடுப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பித்து வருகின்றோம். எமது வேலை திட்டங்களில் சுய தொழில் ஊக்குவிப்பு, சேமிப்பு ஆகியன பிரதான அம்சங்களாக இருக்கின்றன. வீட்டு தோட்டம், நெசவு, மீன்பிடி, குடிசை கைத்தொழில்கள் போன்றவற்றை ஊக்குவித்து வருகின்றோம். காரைதீல் மீன்பிடி துறையை ஊக்குவிப்பதை பிரதான வேலை திட்டமாக உத்தேசித்து உள்ளோம் என்றார்

# தலவாக்கலையில் ஆர்ப்பாட்டம்

**தலவாக்கலை பி.கேதீஸ்**



தலவாக்கலை சுமண தேசிய உயர்தரப் பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட புதிய அதிபரை கடமைகளை பொறுப்பேற்க விடாமல் சிலர் தடுப்பதாகக் கூறி, இன்று(10) தலவாக்கலை நகரில் பெற்றோர்களால் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. தலவாக்கலை நகரிலிருந்து சுரோகங்களை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுப்பட்ட பெற்றோர்கள் சுமண தேசிய உயர்தரப் பாடசாலையை நோக்கி பேரணியாகச் சென்று பாடசாலைக்கு அருகாமையில் மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த பாடசாலையின் நியமிக்கப்பட்ட அதிபர் போராட்ட இடத்திற்கு வந்து தாம் பாடசாலை அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டதாக தெரிவித்ததையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட குழுவினர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# உக்கிரமடையும் கடலரிப்பை தடுக்கவும்

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**



சாய்ந்தமருது மற்றும் மாளிகைக்காடு பிரதேசங்களில் மீண்டும் உக்கிரமடைந்து வருகின்ற கடலரிப்பு அனர்த்தத்தை கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகிறது. கடலரிப்பு காரணமாக இப்பிரதேசங்களில் இயற்கை மற்றும் கடற்றொழில் வளங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன. மீன்பிடித் தொழிலார்களின் வாடிகள் கடல் அலைகளினால் அடித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதனால் வலைகள் மற்றும் மீன்படி உபகரணங்களை பாதுப்பாக வைத்துக் கொள்வதற்கும் மீனவர்கள் ஓய்வெடுப்பதற்கும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

படகுகள், தோணிகள் தரித்து வைக்கப்படுகின்ற கரையோரப் பரப்புகள் கூட கடல் அலைகளினால் காவு கொள்ளப்பட்டிருப்பதால் அவற்றை நிறுத்தி வைப்பதில் பாரிய சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. இந்த நிலைமையினால் இப்பகுதியில் கடற்றொழில் பாதிக்கப்பட்டிருப்பதாக மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடலரிப்பினால் பல தென்னை மரங்களும் கடலுக்கு இரையாகி வருகின்றன. மக்கள் பொழுது போக்கிற்காக பயன்படுத்துகின்ற கடற்கரை வளாக இடப்பரப்புகள் குறுகி வருவதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். கடற்கரை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உள்ளக வீதிகள் சிலவும் சேதமடைந்து வருகின்றன. சாய்ந்தமருது சிறுவர் பூங்கா மற்றும் மீனவர் நூலகம், மாளிகைக்காடு மையவாடி போன்றவையும் பொதுக் கட்டிடங்களும் அபாயத்தை எதிர்நோக்கியிருக்கின்றன.

கடந்த 2020 ஆம் ஆண்டு பிற்பகுதியில் கடலரிப்பு காரணமாக மாளிகைக்காடு மையவாடியின் சுற்றுமதில் இடிந்து வீழ்ந்து, அடக்கம் செய்யப்பட்டிருந்த ஜனாஸாக்களின் உடற்பாகங்களும் வெளிவருகின்ற நிலைமை ஏற்பட்டதையடுத்து சுமார் 14 மில்லியன் ரூபா செலவில் கரையோரம் பேணல் திணைக்களத்தினால் தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டிருந்தது.

# இரு தங்கப்பதக்கங்களை வென்ற மாணவன்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

இரு தங்கப் பதக்கங்களை வென்று மட்டக்களப்பு மண்ணுக்கு பெருமை சேர்த்த வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலய மாணவன் அரபாத் மொஹமட் அதீப்!! தேசிய கராத்தே சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 12வது தேசிய கராத்தே போட்டிகளில் பங்கு பற்றிய வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலய மாணவன் அரபாத் மொஹமட் அதீப் 8வது பிரிவில் 2 தங்கப்பதக்கங்களை வென்று கல்வி கற்கும் பாடசாலைக்கும் மட்டக்களப்பிற்கும் பெருமை சேர்த்துள்ளார். இவர் வாழைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டு கழகத்தின் போசகரும் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரருமான யாசீர் அரபாத் மற்றும் பாத்திமா ஆகியோரின் புதல்வருமாவார்.

# தானிய விதைப் பைக்கற்றுக்கள் வழங்கி வைப்பு



**எப்.முபாரக்**

திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஆலயப் பரிபாலன சபை மற்றும் இந்து அறநெறிப் பாடசாலைகளுக்கு மரக்கறி மற்றும் தானிய விதைப் பைக்கற்றுக்கள் வழங்கும் நிகழ்வு இன்று மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

நாடு எதிர்நோக்கியுள்ள தற்போதைய நிலையில் பயன்படுத்தாமலிருக்கக் கூடிய காணிகளில் பயிர் ச்செய்கையை மேற் கொண்டு உணவு உற்பத்தியை மேம்படுத்துவது அரசாங்கத்தினுடைய கொள்கையாகக் காணப்படுகிறது.அதனடிப்படையில் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கை செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் ஆலயம் மற்றும் அறநெறிப்பாடசாலையைச் சார்ந்த வெற்றுக் காணிகளில் குறிப்பிடத்தக்க ஒரு பிரதேசத்தில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்காக இந்த விதைப் பைகற்றுக்கள் தங்களுக்கு வழங்கப்படுகின்றன. இச்செயற்பாடு மக்களுக்கு முன்னுதாரணமாக அமையுமென்று இதன்போது மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

பயிர்ச்செய்கை, உற்பத்தி மேற்கொள்வதன் சமகாலத் தேவை தொடர்பில் இதன்போது மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம். குகதாசன் அவர்களால் தெளிவுப்படுத்தல்களும் முன்வைக்கப்பட்டன. அத்துடன் அறநெறி இறுதிப்பரீட்சைக்கான தயார்படுத்தல் கருத்தரங்கும் இதனோடு இணைந்ததாக முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சித் திட்டமானது இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் மாவட்ட செயலகம் என்பனவற்றின் ஒருங்கிணைப்பு மூலம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் மாவட்ட இந்து சமயக் கலாசார உத்தியோகத்தர் எஸ். இலக்குமி தேவி,ஆலயப் பரிபாலன சபை நிர்வாகிகள், இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளராக அமீர்



**( காரைதீவு நிருபர் சகா)**

சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளராக இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் தர அதிகாரியான எஸ்.எம்.எம்.அமீர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இன்றுபுதன்கிழமை(10) தனது பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

அச்சமயம், முன்னாள் சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் எம். எஸ் .சஹுதுல் நஜீம் மற்றும் கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தார்கள். சம்மாந்துறை வலய கல்வி பணிமனையில் பிரதி கல்வி பணிப்பாளராக கடமையாற்றி வந்த அமீர் மருதமுனையைச் சேர்ந்தவர் ஆவார்.

அவர் இன்று முதல் வலயக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவர் வலயத்தின் ஏழாவது வலயக்கல்விப் பணிப்பாளர் ஆவார். இதேவேளை, சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளராக இருந்து இடமாற்றம் பெற்ற எம். எஸ் சஹுதுல் நஜீம் நேற்று கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளராக பதவி ஏற்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் வரிசைகள் இன்றி எரிபொருள் விநியோகம்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி நிலையை தொடர்ந்து எரிபொருளை பெற்றுக்கொள்வதிலும் மக்கள் பாரிய சிரமத்தினை எதிர்கொண்டுவந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் நீண்ட வரிசைகளில் பல நாட்கள் காத்திருந்தே மக்கள் எரிபொருளை பெற்றுக்கொண்டனர். இதற்கான தீர்வினை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் நோக்கில் எரிபொருள் அமைச்சரினால் முன்வைக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்ட **QR** முறைமையிலான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து தற்போது மட்டக்களப்பு மாவட்டத்திலும் ஞசு முறைமையில் எரிபொருள் வழங்கப்பட்டுவரும் நிலையில் தற்போது எரிபொருள் வரிசைகள் இன்றி **QR** முறைமையில் மக்களுக்கு சிரமமின்றி எரிபொருள் வழங்கப்பட்டு வருகின்றமையினை அவதானிக்க முடிகின்றது.

# "ஆதிகாலத்து கிழக்கிலங்கை சமூகமும் பண்பாடும்" பேருரை

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

"ஆதிகாலத்து கிழக்கிலங்கை சமூகமும் பண்பாடும்" எனும் தலைப்பில் மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் பேருரையாற்றும் நிகழ்வொன்று நாளை 11.08.2022 திகதி வியாழக்கிழமை பி.ப 4.00 மணி மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் மட்டக்களப்பில் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு பிள்ளையாரடியில் அமைந்துள்ள தமிழ்ச்சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ள குறித்த நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சிவசுப்ரமணியம் பத்மநாதன் பேருரையாற்றவுள்ளார்.



# இருதய நோய்க சிகிச்சை நிலையம் மட்டு கிரான்குளத்தில் திறந்து வைப்பு






**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

நாட்டில் பிறப்பில் இருதய நோயினால் பாதிப்புக்குள்ளாகும் சுமார் 1500 சிறார்களின் இருதய நோய்களுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் பாரிய சிகிச்சை நிலையம் ஒன்று மட்டக்களப்பு கிரான்குளத்தில் நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின்ஸ்ரீ சத்யசாய்பாபா பவுண்டேஷன் இலங்கை அரசின் சுகாதார அமைச்சுடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அமைய சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த சிறுவர் இருதய சத்திர சிகிச்சை நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சகோதரியும் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் மருமகளுமான பெரிய ஜயவர்தனவின் முன்னெடுப்பில் இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. குறித்த சத்திர சிகிச்சைக் கூடத்தினை பகவான் சத்யசாய் பாபாவின் சீடர் சுவாமி சத்குரு ஸ்ரீ மதுசுதன்சாய் வைபவ ரீதியாக திறந்து வைத்துள்ளார்.

ஐக்கிய ராஜ்யத்தின் பிர்மிங்காம் நகரில் செயல்படும் பிரபல வைத்திய சாலையின் வைத்திய நிபுணர் குழுவே இந்த சிறுவர் சத்திரசிகிச்சையை மேற்கொள்ள இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் பிறப்பிலேயே சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் இருதய நோய்க்கு உள்ளாகின்றமை குறிப்பிடத்தக்கது. இதில் சுமார் 1500 பேர் மாத்திரமே தென் கிழக்கு ஆசியாவின் மிகப் பெரியசிறுவர் சத்திர சிகிச்சை நிலையம் அமைந்துள்ள கொழும்பு சீமாட்டி வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. சுமார் 1500 பேர் காத்திருப்போர் பட்டியலில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த குறைபாடு தீர்த்துவைக்கும் வகையிலேயே ஸ்ரீ சத்ய சாய்பாபா சரணாலயத்தின் அனுசரணையில் மட்டக்களப்பு கிரான் குளத்தில் இந்த
சத்திர சிகிச்சை கூடம் செயல்பட இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இது தவிர கிழக்கு மாகாணத்தில் சிறுநீரக நோய்க்குள்ளாவோர்களின் வசதி கருதி இந்த வைத்தியசாலையில் இரத்த சுத்திகரிப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள வைத்திய சாலைகளில் சேர்க்கப்படும் சிறுநீரக நோயாளிகளுக்கு, இரத்த சுத்திகரிப்பு வசதி செய்வதற்கும் குங்கு வசதி செய்யப்பட்டுள்ளது. குறித்த வைத்தியசாலையின் திறப்பு விழா தொடர்பாக இலங்கை ஜனநாயக சோசலீச குடியரசின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அனுப்பி வைத்துள்ள செய்தி மடலில் நாடு எதிர்நோக்கும் பொருளாதார சிக்கலுக்கு மத்தியில் சிறுவர்களுக்கான இருதய சத்திரசிகிச்சை கூடத்தை நிறுவுவதற்கு முன் வந்த பகவான் சாய்பாபா நிர்வாகத்தினருக்கு அரசாங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிப்பதாகவும் எதிர்காலத்தில் இப்பிரதேசத்தில் இதுபோன்ற பல்வேறு வசதிகளை சாய்பாபா ஆலயம் திட்டமிட்டுள்ளதுபற்றி மகிழ்ச்சி அடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

திறப்பு விழா வைபவத்தின்போது இந்த சத்திரசிகிச்சை வசதிக்கு நேரடி யாக தொடர்புபடும் கொழும்பு சீமாட்டி வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய நிபுணர் வைத்தியர் விஜேசூரிய, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர். எம் தௌவ்பீக் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ். சுகுணன் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் இரா. முரளிஸ்வரன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர். வீ.கனகசிங்கம் உள்ளிட் டோருக்கு இந்நிகழ்வின் போது பொன்னாடை போர்த்தியும் பதக்கங்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டது.

குறித்த வைத்தியசாலையில் ஏற்கனவே வெளிநோயாளர் பிரிவு வைத்திய சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

